விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திரு.இரா.கண்ணன், இ.ஆ.ப.,

ந.க.எண். 33257/2019/பே2

நாள்.10.7.2020.

பொருள்: பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – மதுரை மண்டலம் – விருதுநகர் மாவட்டம் – சேத்தூர் தேர்வுநிலைப் பேரூராட்சி – வரித்தண்டலர் – கணேசன் (திரு) ந. என்பவர் – மேற்படி பணியிடத்தில் 3.12.2018ம் தேதி முற்பகல் பணியில் சேர்ந்தது – ஓராண்டு பணி பூர்த்தி செய்தது – பணியினை ஒழுங்குபடுத்தி ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை: 1)அரசாணை (நிலை) எண்.63 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(பேரூ1) துறை நாள். 12.6.2018.
2)விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் நடவடிக்கைகள் ந.க.எண். 42355/2014/பே2 நாள். 29.11.2018.
3)மற்றும் இதர ஆவணங்கள்

---

**ஆணை:**

மதுரை மண்டலம், விருதுநகர் மாவட்டம், சேத்தூர் தேர்வுநிலைப் பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிபுரிந்து வரும் திரு.ந.கணேசன் என்பவருக்கு பார்வை 1ல் காணும் அரசாணையின்படி கீழ்நிலைப்பணியிலிருந்து 20 சதவீத பதவி உயர்வு மூலம் வரித்தண்டலராக பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி பார்வை 2ல் காணும் இவ்வலுவலக நடவடிக்கைகளின்படி சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சியில் வரித்தண்டலராக 3.12.2018ம் நாள் முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

2)பணியில் சேர்ந்து ஓராண்டுகாலம் பணியினை திருப்திகரமாக பூர்த்தி செய்துள்ளதால் இவர் பணியில் சேர்ந்த நாளான 3.12.2018ம் நாள் முற்பகல் முதல் இவரது பணியினை ஒழுங்குப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

3)இவரது பணிப்பதிவேட்டில் தேவையான பதிவுகள் மேற்கொள்ள சேத்தூர் பேரூராட்சி செயல்அலுவலருக்கு இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

மேற்படி பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதற்கான சான்றினை (பணிப்பதிவேட்டின் நகலுடன்) உடன் சமர்ப்பிக்க சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்
விருதுநகர் மாவட்டம்.

பெறுநர்

திரு.ந.கணேசன்
வரித்தண்டலர்
சேத்தூர் பேரூராட்சி
விருதுநகர் மாவட்டம்.
} செயல்அலுவலர் மூலமாக.

நகல்
1)பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை–108
2)செயல்அலுவலர், சேத்தூர் பேரூராட்சி, விருதுநகர் மாவட்டம்.
3)உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை , விருதுநகர்.
4)பே2 பிரிவு இருப்புக்கோப்பு.